
# திராவிடத்தால் வாழ்கிறோம்

888

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

17



பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# மனிதம் போற்றும் மேலமெஞ்ஞானபுரம்!

மேல மெஞ்ஞானபுரத்தில், 1988-இல் பகுத்தறிவாளர் கழகம் உருவானதில் இருந்தே, வாரந்தோறும் தவறாமல் குடும்ப சந்திப்புகளை நடத்தி, அதில் தந்தை பெரியாரின் சாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்புக் கருத்துகளைப் பேசி வந்துள்ளனர். திருக்குறளைப் பரப்பினர்.

தேவாலயத்திற்கோ, கோயிலுக்கோ செல்வதைத் தவிர்த்தனர். கிறிஸ்தவத்தில் *Vacation Bible school (VBS)* என கோடைகாலத்தில், குழந்தைகள் மத்தியில் அந்த மார்க்கத்தைப் பரப்பும் வகுப்புகள் நடத்தப்படுவது வழக்கம். மேலமெஞ்ஞானபுரத்திலும் இப்படி நடத்தப்பட்ட *VBS* வகுப்புகளுக்கு நேரெதிராக, பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் வி.ஆர்.எஸ். (*VRS*) வகுப்புகளை 1989-இல் தொடங்கினர். அதாவது ‘விடுமுறை கால பகுத்தறிவுப் பள்ளி’ *Vocational rationalist school*. பத்தாம் வகுப்பு வரை படிக்கும்



மாணவர்களை அழைத்து வந்து, 10 நாட்களுக்கு பகுத்தறிவுக் கொள்கைகளை ஊட்டி, அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பது இந்த வகுப்பின் நோக்கம். 36 ஆண்டுகளாக இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன இந்த வி.ஆர்.எஸ். *VRS* வகுப்புகள்.

எந்த மதப் பண்டிகையையும் இவர்கள் கொண்டாடுவதில்லை. தங்கள் குடும்பங்களில் சுயமரியாதைத் திருமணங்களையே நடத்துகின்றனர். இன்றுவரை 20 சுயமரியாதைத் திருமணங்கள் அங்கு நடைபெற்றுள்ளன. அதில் 5 திருமணங்களை திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்களே தலைமையேற்று நடத்தி வைத்துள்ளார். குறிப்பாக, அந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்ணுக்கும், பிற்படுத்தப்பட்ட ஆணுக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் ஊர்வலமாக மணமக்களை அழைத்து வந்து திருமணத்தை நடத்தினர்.

அந்த திருமணத்தில், இரு சமுதாயத்தைச் சேர்ந்த உறவினர்களும் கலந்துகொண்டார்கள். இந்தத் திருமணங்களில் பெண்கள் யாரும் தாலி அணிவதில்லை, அவர்கள் குடும்பங்களில் பூப்பு நன்னீராட்டு விழா கிடையாது. சோதிடம், ஜாதகம், நேர்த்திக்கடன் போன்ற மூட நம்பிக்கைகள் எதையும் பின்பற்றுவதில்லை. தமிழ்ப்பெயர் மட்டுமே வைக்கிறார்கள்.

பெரியாரின் பிறந்த நாளும், பொங்கல் விழாவும் மட்டும்தான் அவர்களுக்கான கொண்டாட்டம். மரணத்திலும் மதச் சடங்குகள் பின்பற்றப்படுவதில்லை. இன்னும் சொல்லப்போனால், இறந்தோரை அடக்கம் செய்வதே அரிதுதான். காரணம், உடற்கொடை பதிவு செய்து, உடலை அரசு மருத்துவக் கல்லூரிக்கு வழங்கி விடுவதே அவர்களின் வழக்கம்.

மேலமெஞ்ஞானபுரத்தில் இருவராகத் தொடங்கிய இந்த இயக்கம், இன்று ஐம்பதுக்கும் மேற்பட்டோரை இயக்கமாக்கியிருக்கிறது. சிலர் மருத்துவர்களாகவும், சிலர் பொறியாளர்களாகவும், பலர் பட்டதாரிகளாகவும் இருக்கிறார்கள். இப்போது, மேலமெஞ்ஞானபுரம் பகுத்தறிவாளர் கழகத்தின் தலைவராக க.தங்கராஜ் என்பவரும், செயலாளராக கி.சேகர் என்பவரும், அமைப்பாளராக செ.முருகன் என்பவரும் உள்ளனர். டேவிட் செல்லத்துரை திராவிடர் கழகத்தின் தென்காசி மாவட்டக் காப்பாளராக உள்ளார்.

பகுத்தறிவாளர் கழகத்தின் 36 ஆண்டுகால களப் பணிகளால் மேலமெஞ்ஞானபுரத்தில் சாதி ஆணவமும் கிடையாது, ஆணவக்கொலைகளும் கிடையாது. இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்ற நிலையிலிருந்து மாறி, திராவிடர்களாக - தமிழர்களாக மனிதம் போற்றுகின்றனர்.

மெய் என்றால் உண்மை, ஞானம் என்றால் அறிவு... பெயருக்கு அர்த்தம் சேர்த்திருக்கிறது மேலமெஞ்ஞானபுரம்.

**...பயணிப்போம்.**

## வண்ணம் பூசும் தொல்லியல் துறை!

ராஜஸ்தான் மாநிலத்தில் 4,500 ஆண்டுகளுக்கு முந்தைய நகரம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அது சரஸ்வதி நதியுடன் தொடர்புடையது என்றும் கடந்த சில நாட்களுக்கு முன் தகவல் பரவியது. ஆனால், அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் சிந்து சமவெளி நாகரிகத்துக்குப் பிந்தையது என்றும், அதிகபட்சமாக மௌரிய ஆட்சிக்காலத்தைச் சேர்ந்தது என்றும் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் டீக் மாவட்டத்தில் உள்ள பஹாஜ் கிராமத்தில் கடந்த ஜனவரியில் தொடங்கப்பட்ட இந்த அகழ்வாராய்ச்சியில், ‘மௌரியர் காலம்’, ‘குஷானர் காலம்’ மற்றும் ‘குப்தர் காலம்’ உள்ளிட்ட வெவ்வேறு காலகட்டங்களின் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை வைத்து, அந்த தளத்தின் தொல்லியல் ஆய்வாளர்கள் ‘சிந்துவெளி நாகரிகத்துக்கு முந்தைய வாழ்வியல் கண்டறியப்பட்டுள்ளது. அது ரிக் வேத காலத்துடன் பொருந்திப்போகிறது’ எனக் கூறிய தகவலையே வடமாநில ஊடகங்கள் வேகமாக பரப்பின.

ராஜஸ்தானில் கிடைத்த பொருள்கள் 4,500 ஆண்டுகள் பழமையானது என்பதற்கு, எந்த ஆதாரமும் இல்லாதபோதும், ஒன்றிய தொல்லியல் துறை அதிகாரிகளே அதை 4,500 ஆண்டுகள் பழமையானது என்றுகூறி வருகின்றனர். சிந்து சமவெளி நாகரிகப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தொல் திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆரியர்கள் இந்தியாவுக்கு வெளியே இருந்து வந்தவர்கள் என்றும் கூறி வரும் நிலையில், கீழடியில் கிடைத்த தொன்மையான பொருள்கள் ஆரியர்கள் வெளியே இருந்து இந்தியாவுக்குள் வந்தவர்கள் என்ற கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்தன.

ஆனால், அதுதொடர்பான அறிக்கையை வெளியிடாமல் முடக்கும் ஒன்றிய தொல்லியல் துறை, ஆதாரமின்றி ‘சரஸ்வதி நாகரிகம்’ என்ற இல்லாத ஒன்றை பேசுபொருளாக்கி இருக்கிறது. இதன் மூலம் ஆரியர்கள் இந்தியாவிற்கு வெளியே இருந்து வந்தவர்கள் அல்ல என்று நிறுவுவதே இவர்களின் நோக்கமாக உள்ளது. வரலாற்று ஆதாரத்தின் மேல் வண்ணம்பூசும் இந்தச் செயல், வதந்தியைவிட மோசமானது என எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்


67

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# ஆரியம் செய்கின்ற அடாவடி!

***அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கியதால்தான் திருவில்லிபுத்தூர் பெரிய மாரியம்மன் கோயில் அர்ச்சகர்கள் ஆபாசக் குத்தாட்டம் போட்டதாக ஆர்.எஸ்.எஸ். பத்திரிகையான ‘ஆர்கனைஸர்’ தொடங்கி, ‘தினமலர்’ வரை தி.மு.க. அரசைத் திட்டித் தீர்க்கின்றனவே?***

கோயில் கொடிக்கம்பத்தைத் தாண்டி வரக்கூடாது என்று காலம் காலமாக ஆர்.எஸ்.எஸ். மற்றும் தினமலர்களின் முப்பாட்டன் வகையறாக்களால் தடுத்து நிறுத்தப்பட்ட சமுதாயத்தினரையும் கருவறைக்குள் நுழையச் செய்து, ஆகம விதிகளை அறிந்திருந்தால் அவர்களும் அர்ச்சனை செய்ய முடியும் என்ற நிலையை உருவாக்கியுள்ள தி.மு.க. ஆட்சியை அவர்கள் திட்டாமல் இருந்தால்தான் ஆச்சரியம். ஆனால், திட்டும்போதுகூட உண்மையோ, நேர்மையோ அந்தக் கூட்டத்திட மிருந்து வரவே வராது என்பதற்கு மற்றொரு சான்றுதான் திருவில்லிபுத்தூர் பெரிய மாரியம்மன் கோயில் அர்ச்சகர்கள் குத்தாட்ட விவகாரம்.




இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில்தான் இந்த கோயில் உள்ளது. விரைவில் இதற்கு குடமுழுக்கு நடத்துவதற்கு அறநிலையத்துறை ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இதற்காக கோயிலின் உதவி அர்ச்சகர் கோமதிவிநாயகம் என்பவர் வீட்டில், குடமுழுக்கிற்காக வந்திருந்த வினோத், கணேசன் ஆகிய குருக்கள்கள் தங்கியிருந்தனர். இவர்கள்தான் மது அருந்திவிட்டு ஆபாசக் குத்தாட்டம் போட்டவர்கள். கோயிலுக்கு வந்த பெண்களின் முகத்தில் திருநீறை அள்ளி வீசியவர்கள். இவர்களில் யாரும், தமிழ்நாடு அரசின் ’அனைத்து சாதியினர் அர்ச்சகர் பயிற்சி’யில் பங்கேற்று பணி நியமனம் பெற்றவர்களல்லர். இந்த மூவருமே, பிராமணர்கள் மட்டுமே படிக்க அனுமதியுள்ள தூத்துக்குடி ஸ்ரீஆலாலசுந்தர வேத சிவாகம வித்யாலயத்தில் பயின்றவர்கள். இந்த வித்யாலயாவின் தலைமை ஆசிரியர் செல்வம் பட்டர் தூத்துக்குடி சிவன் கோயில் தலைமை அர்ச்சகராக உள்ளார். இந்த உண்மைகளை வெளிப்படுத்தியுள்ள தமிழ்நாடு அனைத்து சாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத்தின் தலைவர் வா.அரங்கநாதன் இது குறித்து, தமிழ்நாடு காவல்துறை தலைவர் அலுவலகத்தில் புகார் தெரிவித்திருக்கிறார்.

> “ஆபாசக் கூத்துகளை அனைத்து சாதியினர் மீது பழிபோடுவதுதான் காலம் காலமாக ஆரியம் செய்கின்ற அடாவடி.”

முழுக்க முழுக்க பிராமணர்களால் பிராமணர்களுக்காக நடத்தப்படும் ஆகமப் பயிற்சிப் பள்ளியில் பயின்று, பாரம்பரிய வழக்கத்தை விடமாட்டோம் என்ற பிடிவாதத்துடன் திருவில்லிபுத்தூர் பெரிய மாரியம்மன் கோயிலில் அர்ச்சனையும் குடமுழுக்கு பூசைகளும் செய்ய வந்தவர்கள் நடத்திய ஆபாசக் கூத்துகளை அனைத்து சாதியினர் மீது பழிபோடுவதுதான் காலம் காலமாக ஆரியம் செய்கின்ற அடாவடி. அதைத்தான் ஆர்.எஸ்.எஸ்.-தினமலர் வகையறாக்கள் தொடர்கின்றன. இவர்களின் லட்சணம் எப்படிப்பட்டது என்பதை ஏற்கனவே காஞ்சிபுரம் கோவிலில் தேவநாதன் குருக்கள் நிரூபித்திருக்கிறார்.

**...வினா தொடரும்.**

## ப்ளாஷ்பேக்



### கழகத்துக்கே முதல் வாக்கு!



தா.சோபியா அன்புச்செழியன்

எனக்கு ஓட்டுரிமை வந்ததும், முதல் வாக்கை, கழகத்துக்குத்தான் அளித்தேன். அதற்குக் காரணம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். கழகக் கொள்கையும், கலைஞர் அவர்களின் களப்பணியும் தமிழ் ஆற்றலும் எல்லோரையும் கவர்ந்திழுக்கக் கூடியது. 2003-ஆம் ஆண்டு, எனது திருமணத்திற்குப் பின் வாழ்த்துப் பெற, என் மாமனார் முனைவர். மு.பி.பாலசுப்ரமணியன் மற்றும் கணவர் மு.பி.அன்புச்செழியன் ஆகியோருடன் சென்று ஓய்வின்றி உழைத்தவரை நேரில் கண்டு வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தேன்.

**– தா.சோபியா அன்புச்செழியன்,**
**முதல்வர், பிளஸ்சிங்ஸ் பள்ளி, செங்கல்பட்டு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கழக வரலாறு

### எதிர்காலப் பொறுப்புகள்!

1951-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ஆம் தேதி, கழகத்தின் பொதுக்குழு மதுரையில் கூடியது. இந்த மாநாட்டில் கழகத்தின் சட்ட திட்டங்கள், மாநில மாநாடு ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. 84 உறுப்பினர்கள் வருகை தந்தனர். கழகத்தின் சட்ட திட்டங்களை கே.ஏ.மதியழகன் படித்தார். 1952-ஆம் ஆண்டு தேர்தலில் கடைபிடிக்க வேண்டிய முறை, ஐக்கிய முன்னணி, கழகத்தின் எதிர்காலப் பொறுப்புகள் குறித்து பேரறிஞர் அண்ணா விளக்கிப் பேசினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131